(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.5/2023 |
| Deposition Of Witness for | : | PW1 |
| Name | : | **Tr.Durai** |
| Father's Name | : | MARI |
| Village | : | D 1/2 TAISHA APARTMENTS |
| Taluk | : | WEST NATESAN NAGAR, CHENNAI. |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 47. |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **3rd January 2025.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது காவல் துறை துணைத்தலைவராக நலன் பொறுப்பில் காவல் துறை தலைமையகத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023-2024-ம் ஆண்டு இராமநாதபுரம் சரகம் காவல் துறை துணைத்தலைவராக பணிபுரிந்தேன். அப்போது சென்னை ஊழல் தடுப்பு

3/1/25

03/01/2025

மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக கடித எண்.RC.No.165/2022/POL/SG, Dated.03.02.2023 ன் படி எனது அலுவலகத்திற்கு எனக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2022–ன் வழக்கில் இசைவாணை வழங்க வரப்பெற்ற கோப்பின் வழக்கின் விசாரணை அறிக்கையுடன் முதல் தகவல் அறிக்கை, சாட்சிகளின் வாக்குமூல நகல்கள், கைப்பற்றுதல் மகஜர், ஒப்படைப்பு மகஜர் மற்றும் வழக்கில் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் வரப்பெற்றது.

2. நான் பெறப்பட்ட ஆவணங்களில் எனது முழு கவனத்தையும் செலுத்தி பார்வையிட்டு பிறகு 22.02.2023–ம் தேதியில் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய திரு.ஜேசுதாஸ் அவர்களிடம் வழக்கின் சம்பந்தமாக அறிக்கை செய்துள்ள ஆவணங்களை குறித்து கேட்டு தெரிந்து கொண்டேன். பகுப்பாய்வு அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட நகலை என்னிடம் சமர்ப்பித்தார். நான் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்து அவரிடம் வழக்கின் விபரங்களை கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

3. புலன் விசாரணையின் அடிப்படையில் எதிரி மீது குற்ற வழக்கு தொடர முகாந்திரம் உள்ளதாக கருதி 22.02.2023 அன்றே ஊழல்

3/1/25 03/01/2025

தடுப்புச் சட்டம் 1988(as amended by Act 16 of 2018) –ன் படி பிரிவு 19(1)(c) ன் படி பிரிவு 7(a)–ன் கீழ் குற்ற வழக்கு தொடர இசைவாணை வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் இசைவாணை என்னால் வழங்கப்பட்டதுதான், அது மொத்தம் 5 பக்கங்கள் கொண்டது. **நான் வழங்கிய இசைவாணை அ.த.சா.ஆ.1** ஆகும். இசைவாணையை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநருக்கு நான் அனுப்பி வைத்தேன். எதிரியை பணி நீக்கம் செய்யும் அதிகாரம் எனக்கு உண்டு. இவ்வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. இந்த வழக்கு சம்பந்தமாக நான் இசைவாணை வழங்கிய போது சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளராக யார் பணியில் இருந்தார்கள் என்றால் இந்த குறிப்பிட்ட தேதியில் திரு.செல்வராஜ் என்பவர் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியில் இருந்தார். இசைவாணை வழங்க கோரி எனது அலுவலகத்திற்கு வரப்பெற்ற கடிதம் நேரில் கொண்டு வந்து கொடுக்கப்பட்டதா அல்லது அஞ்சல் மூலம் பெறப்பட்டதா என்றால் அது எவ்வாறு வந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது, அது அலுவலக நடைமுறை ஆகும்.

3/1/25

03/01/2025

2. நான் வழங்கிய இசைவாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை எனது பார்வைக்கு வைத்த போது ஏதேனும் அலுவலக குறிப்பு மேற்படி ஆவணங்கள் குறித்து மேற்படி கோப்புகளுடன் எனக்கு வைக்கப்பட்டதா என்றால் வைக்கப்பட்டது, விசாரணை அறிக்கை மற்றும் வேண்டுகோள் கடிதம் போன்ற ஆவணங்கள் எனது அலுவலகத்தில் இருக்கும், ஆனால் அந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த வேண்டுகோள் கடிதம் உள்ளிட்ட இதர ஆவணங்களை வழக்கு சம்பந்தமாக நீதிமன்றம் உத்தரவிடும்போது அதை சமர்ப்பிக்க இயலுமா என்றால் வேண்டுகோள் கடிதம் மற்றும் என்னுடைய அலுவலக குறிப்பு ஆகியவை நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் என்னால் சமர்ப்பிக்க இயலும், வழக்கு விசாரணை சம்பந்தமான எந்தவொரு கோப்பும், ஆவணங்களும் என்னுடைய அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை.

3. அ.த.சா.ஆ.1 இசைவாணை ஊழல் தடுப்புச் சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டுதான் நான் வழங்கியுள்ளேனா என்றால் ஆமாம். நான் ஊழல் தடுப்புச் சட்ட விதிமுறைகளை முறையாக பின்பற்றாமல் இயந்திரத்தனமாக மெத்தன போக்கினால் இந்த வழக்கின்

Ax 3/1 Dhu 03/01/2025

ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உயர் அதிகாரிகளின் ஆணைக்கிணங்க ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் கையொப்பம் இட்டு அனுமதி வழங்கினேன் என்றால் சரியல்ல.

4. இசைவாணை வழங்க வேண்டுகோள் கடிதம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து எவ்வளவு காலத்திற்குள் இசைவாணை வழங்க வேண்டும் என்று கால வரையறை உள்ளதா என்றால் கால வரையறை உள்ளது. அந்த காலவரையறையின் அடிப்படையில்தான் அ.த.சா.ஆ–1 இசைவாணை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட புகார்தாரரை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

5. இந்த வழக்கில் கொடுக்கப்பட்ட ஆவணங்களில் எதிரியை விசாரித்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. எதிரியின் வாக்குமூலத்தினை நான் பார்வையிட்டு பரிசீலனை செய்து அது குறித்த விபரங்களை அ.த.சா.ஆ.1 இசைவாணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அ.த.சா.ஆ.1 இசைவாணையில் குறிப்பிட்டுள்ள எதிரியின் வாக்குமூலம் குறித்து நான் என்ன குறிப்பிட்டுள்ளேன் என்றால் எதிரி குறித்து குறிப்பாக எதுவும்

சொல்லவில்லை, ஆனால் அ.த.சா.ஆ.1 இசைவாணையில் இந்த குற்ற வழக்கு இந்த எதிரியை குறித்து மட்டுமே குறிப்பிட்டுள்ளேன்.

6. இந்த வழக்கில் புகார்தாரரான ஹக்கீம் மதுரை மத்திய குற்றப்பிரிவு குற்ற எண் 20/2022 வழக்கில் எதிரியாக உள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த ஆவணங்களின் அடிப்படையில் தெரியும். மதுரை மத்திய குற்றப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 20/2022 சார்ந்த புகாரையே சிவகங்கை மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களின் பரிந்துரையின் பேரில் சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவில் ஹக்கீமின் மீது குற்ற எண். 24/2022–ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விபரங்கள் தெரிந்துதான் நான் இசைவாணை வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

7. இசைவாணை வழங்குவதற்கு முன்பாக சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் துணைகண்காணிப்பாளர் அவர்களை தொலைபேசி மூலமோ அல்லது நேரில் அழைத்தோ எதிரி இராமகிருஷ்ணன் குறித்து விசாரணை செய்தேனா என்றால் ஆமாம். அவ்வாறு நான் விசாரணை செய்ததற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

3/1/25

03/01/2025

அவ்வாறு எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை, இசைவாணை வழங்குவதற்கு முன்பு நான் முழுமனநிறைவு அடைவதற்கு மேற்படி வழக்கு குறித்து கேட்டு அறிந்தேன். மேற்படி விபரம் குறித்து அ.த.சா.ஆ.1 –ல் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

8. இந்த வழக்கின் புகார்தாரர் ஹக்கீமிற்கும், எதிரிக்கும் ஏதாவது உள்நோக்கம் குறித்து என்னுடைய இசைவாணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. இசைவாணையில் முதல் பத்தியில் "The accused is under suspension from 06.08.2022" என்று எதனால் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இசைவாணை வழங்கிய தேதியான 22.02.2023 அன்று எதிரியின் பணிநிலை குறித்து நான் குறிப்பிட வேண்டும் என்பதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன்.

9. எனக்கு எதிரியை நேரடியாக பணிஇடைநீக்கம் செய்ய அதிகாரம் உள்ளதா என்றால் ஆமாம். நான் இசைவாணை வழங்கிய பின்பு எதிரி கைது செய்யப்பட்டாரா அல்லது இசைவாணை வழங்கும் முன்பு எதிரி கைது செய்யப்பட்டரா என்றால் நான் இசைவாணை வழங்குவதற்கு முன்பாகவே எதிரி கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஆவணத்தின் அடிப்படையில் தெரிந்துகொண்டேன். அ.த.சா.ஆ.1 இசைவாணை ஊழல்

தடுப்புச் சட்டத்தினை முறையாக பின்பற்றப்படாமல் இயந்திரத்தனமாக உயர் அதிகாரிகளின் பரிந்துரையின்பேரில் ஒத்த கருத்துடைய ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட புகாரின் அடிப்படையில் மற்றொரு வழக்கு பதிவு செய்ய தூண்டப்பட்டு அதனடிப்படையில் நேர்மையாக கடமை உணர்வோடு பணியாற்றிய ஆய்வாளரை உள்நோக்கத்தோடு அவரை களங்கப்படுத்த பொய்யாக புனையப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அதனோடு தொடர்புடைய கைது போன்ற விபரங்கள் அடங்கிய செல்லத்தகாத அ.த.சா.ஆ.1 இசைவாணையை நான் வழங்கினேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u> இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

03/01/2025

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.

3/1/25